# மாவீரர் வாரம் இன்று உணர்வுபூர்வமாக ஆரம்பம்

விலை ரூபா 5-00

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 34 திருவள்ளுவர் ஆண்டு 2023 கார்த்திகை 06 இதழ் 284
யாழ்ப்பாணம் சனிக்கிழமை 21 — 11 — 1992

(யாழ்ப்பாணம்)
தமிழீழ தேசியக்கொடியேற்றத்துடன் மாவீரர் வாரம் இன்று உணர்வுபூர்வமாக ஆரம்பமாகின்றது.
தாயக விடிவுக்காக தம்இன்னுயிர்களை தியாகம் செய்த (4ம் பக்கம் பார்க்க)

## மண்ணுக்காக மடிவதை மாண்புடன் ஏற்றவர்கள்

(யாழ்ப்பாணம்)
இவர்கள் மனிதர்களில்மாறுபட்ட சிந்தனையுடன் வாழ்ந்தவர்கள். இம்மண்ணுக்காக மடிவதை மாண்புடன் ஏற்றுக் கொண்டவர்கள். மக்கள் உறங்க அவர்களைக் காக்க எல்லைகளில் விழித்துக் காத்து நின்றவர்கள், கல்வியைத் (4-ம் பக்க பார்க்க)

## உணவுப்பொருள்களை மாத்திரமே எடுத்துவர அனுமதி

(நல்லூர்)
வடபகுதிக்கு உணவுப் பொருள்கள் தவிர்ந்த ஏனைய பொருள்களை கப்பல் மூலம் அனுப்பி வைக்க கூட்டுப்படைத்தலைமையகம் மறுப்புத் தெரிவித்துள்ளதாக அறிய வருகிறது.
என்ன காரணங்களுக்காக (4-ம் பக்கம் பார்க்க)

# மந்திரி, ஜனாதிபதி செயலர் மீது கொழும்பில் கொலை முயற்சி!

### பொலிஸ் சார்ஜண்ட் படுகாயம்

## துப்பாக்கி நபர்கள் தப்பியோட்டம்!!

வர்த்தக, வணிகத்துறை அமைச்சர் ஜனாப் ஏ. ஆர். எம். மன்சூர், ஜனாதிபதியின் செயலாளர் திரு. கே. எச்.ஜே. விஜேயதாசா ஆகியோர்மீது நேற்றுக் காலை கொலை முயற்சி ஒன்று மேற்கொள்ளப்பட்டது. இனந்தெரியாத இரு நபர்கள் ஏ. கே. 47 ரைபிள்கள், கைக்குண்டுகள் சகிதம் இந்தக் கொலை முயற்சியை மேற்கொண்டனர். எனினும் இது முறியடிக்கப் பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சம்பவத்தில் திரு. விஜேதாசாவின் மெய்ப்பாதுகாவலரான பொலிஸ் சார்ஜன்ட் ஒருவர் படுகாயமடைந்தார். துப்பாக்கி நபர் இருவரும் வாகனம் ஒன்றில் தப்பிச்சென்றனர்.

இச்சம்பவம் பற்றி பொலிஸார் தெரிவித்துள்ளதாவது: திரு. விஜயதாஸவின் வீட்டிலிருந்து ஒருசில யார் தூரத்தில் இத்துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

கறுப்புநிற பைப்பை ஒன்றுடன் வீதியில் நின்றிருந்த சந்தேக நபரைக்கண்ட அயலவர் ஒருவர் திரு. விஜயதாஸவின் பாதுகாப்பு அதிகாரி சார்ஜன்ட் பிரேமசந்திராவுக்கு அறிவித்தார்.

அந்த அதிகாரி சந்தேக நப (4-ம் பக்கம் பார்க்க)

## மெய்ப்பாதுகாவலர் சுடப்பட்டார்

(கொழும்பு)
ஜனாதிபதியின் செயலர் திரு. விஜேயதாசாவின்மெய்ப்பாதுகாவலர் ஒருவர். நபர் ஒருவரை சோதனையிடுவதையும் உடனடியாக அந்த நபர் அந்த மெய்ப்பாதுகாவலரை சுட்டதையும் கண்டதாக சம்பவத்தை நேரில் பார்த்த ஒருவர் தெரிவித்தார்.

அவர்மேலும் கூறுகையில்: சம்பவம் நடைபெற்ற இடத்திற்கு முன்னால் உள்ள மேல் வீட்டில் நான் வசித்து வருகிறேன். வீட்டின் முன்னால் கீழே ஏதோ குழப்ப நிலை காணப்பட்டதால் நான் மாடியிலிரு (4ம் பக்கம் பார்க்க)

## விஜேயதாஸா மீது குறி?

(கொழும்பு)
ஜனாதிபதியின் செயலர் திரு. கே.எச்.ஜே விஜேயதாசாவை கொலை செய்யும் முயற்சியாகவே இந்த நபர் வந்திருக்கலாமெனவும் இவர் விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்தவராயிருக்கலாமெனவும் பொலிசார் தெரிவித்துள்ளனர்.

இச்சம்பவத்தோடு பலருக்கு தொடர்பிருக்கலாமெனவும் பொலிஸ் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (4ம் பக்கம் பார்க்க)

## கடத்திய கார் கைவிடப்பட்டது

(கொழும்பு)
இச்சம்பவத்தின் போது துப்பாக்கி நபர் கடத்திச் சென்ற கார் கிருலப்பனை மாவத்தைக்கு அருகே பின்னர் அநாதரவாக கைவிடப்பட்ட நிலையில் மீட்கப்பட்டது.

துப்பாக்கி நபர் கார்ச்சாரதியை மிரட்டி தள்ளிவிட்டு சென்றது பற்றி மேற்படி கார்ச்சாரதி பொலிஸாரிடம் தமது வாக்கு மூலத்தை கொடுத்துள்ளார்.

காரில் துப்பாக்கி நபர்களின் கையடையாளங்கள் எடுக்கப்பட்டு அவ்விடத்திற்கு உடனடியாக பொலிஸ் நாய்கள் வரவழைக்கப்பட்டு வலைத்த தேடுதல் நடாத்தப்பட்டது. (சி)

## முப்படைகளும் தேடுதல் வேட்டை

(கொழும்பு)
கொழும்பில் நேற்று இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தையடுத்து தப்பியோடிய இரு துப்பாக்கி நபர்களையும் தேடி பெரும் தேடுதலில் முப்படைகளும் ஈடுபட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

துப்பாக்கி நபர்கள் நகர்ப்பகுதியிலேயே இருக்கவேண்டுமெனவும் இவர்களை தேடும் பணியில் பெருமளவு படையினர் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இவ்விருவர் பற்றிய தகவல்களும் சகல தடை முகாம்களுக்கும் கொடுக்கப்பட்டுள்ளதாகவும் பொலிசார் தெரிவித்தனர். (சி)

## மாவீரர் தின கூட்டங்கள்

(யாழ்ப்பாணம்)
மாவீர் வாரத்தையொட்டி இன்று கூட்டங்கள் நடைபெறும் இடங்கள்:

நல்லூர் சாதனா பாடசாலை, நுணாவில் கிழக்கு அமிர்தாம்பிகை வித்தியாலயம், வரணி மகாவித்தியாலயம், கெற்பலி பண்டிதர் குடியிருப்பு அராலி சரஸ்வதிவித்தியாலயம் ஆகிய இடங்களில்கூட்டங்கள் இன்று நடைபெறவுள்ளது. (வி)

## நாடாளுமன்றம் குண்டுத் தாக்குதலுக்கு இலக்காகலாம்

-- சபாநாயகர் எச்சரிக்கை

(கொழும்பு)
நாடாளுமன்றம் தீவிரவாதிகளின் குண்டுத் தாக்குதலுக்கு இலக்காகலாம் என்று சபாநாயகர் அல்ஹாஜ் எம். எச். மொகமட் எச்சரிக்கை செய்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.
(4-ம் பக்கம் பார்க்க)

## புதிய பாதுகாப்பு ஏற்பாடு

(கொழும்பு)
நாடாளுமன்றத்துக்கு விசேஷ பாதுகாப்பு ஏற்பாடுகள் வழங்கப்படவிருக்கின்றன.

நாடாளுமன்றத்துக்கு குண்டுதாக்குதல் ஏற்படும் ஆபத்து ஏற்பட்டிருப்பதாக பாதுகாப்பு அமைச்சுக்கு இரகசியத் தகவல் கிடைத்திருப்பதையடுத்தே புதிய பாது (4-ம் பக்கம் பார்க்க)

## புதியவர்களை அழைத்து வரவேண்டாமென கோரிக்கை

(கொழும்பு)
நாடாளுமன்றத்துக்கு புதியவர்கள் எவரையும் அழைத்து வரவேண்டாமென சபாநாயகர் அல்ஹாஜ் எம். எச். எம். முஹம்மது எம் பிக்களை கேட்டு கொண்டுள்ளார்.

குண்டுத் தாக்குதல் அச்சுறுத்தல் நாடாளுமன்றத்துக்கு (2ம் பக்கம் பார்க்க)

## கொழும்பில் வீதித்தடை சோதனைகள் தீவிரம்

(கொழும்பு)
கொழும்பு நகரின் முக்கிய பகுதிகள் பலவற்றிலும் வீதித் தடைகள் போடப்பட்டு நவீன ஆயுதங்கள் தாங்கிய படையினர் கடமையிலீடுபடுத்தப்பட்டுள்ளனர்.

கடந்த திங்கட்கிழமை கடற்படைத் தளபதி கிளான்ஸி (4-ம் பக்கம் பார்க்க)

## அரச உயரதிகாரிகளின் வீடுகளுக்கு தீவிரபாதுகாப்பு

(கொழும்பு)
நேற்றுக்காலை தாக்குதல் இடம்பெற்ற திம்பிரிகசாய ஜாவத்தை வீதியில் அமைச்சர் மன்சூர், ஜனாதிபதியின் செயலர் திரு விஜயதாஸ உட்பட பல அரச உயரதிகாரிகளின் (4ம் பக்கம் பார்க்க)

## கொமடோர் மொஹான் சமரசேகர புதிய கடற்படைத் தளபதி

(கொழும்பு)
கொமடோர் டி. ஏ. எம். ஆர். சமரசேகர ரியர் அட்மிரல் அந்தஸ்து வழங்கப்பட்டு கடந்த திங்கட்கிழமை முதல் கடற்படைத்தளபதியாக ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டுள்ளார்.

கடற்படையின் 12வது தளபதி ரியர் அட்மிரல் சமரசேகர ஆவார். கடந்ததிங்கட்கிழமை இடம்பெற்ற குண்டுவெடிப்பில் கொல்லப்பட்ட அட்மிரல் கிளான்ஸி பெர்னாண்டோவின் இடத்திற்கு இவர் நியமிக்கப் (4-ம் பக்கம் பார்க்க)

# மாவீரர் வார நிகழ்ச்சிகள் பொதுமக்கள் தீவிர ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

இவ்வாண்டு மாவீரர் வாரம் முற்றுமுழுதாக பொதுமக்களாலேயே கொண்டாடப்படவுள்ளது.

மாவீரர் நினைவாக வலிகாமத்தில் 6 பந்தல்களும், தென்மராட்சியில் 4 பந்தல்களும் வடமராட்சியில் 2 பந்தல்களும் அமைக்கப்பட்டுள்ளன கடற்புலிகளாலும் 8 பந்தல்கள் அமைத்துள்ளனர்.

இப்பந்தல்களில் அந்தப் பகுதி வட்ட மாவீரர்களின் உருவப்படங்கள் வைக்கப்படும் இவற்றுக்கு தினமும் பொதுமக்களும் மாணவர்களும் மலரஞ்சலி செலுத்துவர்.

யாழ். மாவட்டத்தில் 20ற்கும் மேற்பட்ட அலங்கார வளைவுகள் அமைக்கப்பட்டுள்ளன. தமிழீழ விடுதலைப் புலிகள் கலைபண்பாட்டுக் கழகம் மாவீரர் நினைவாக எழுச்சி கரக நிகழ்ச்சி ஒன்றை நடாத்திவருகிறது (159)

## இன்று

(அரியாலை)

வலி - வடக்குப்பிரதேசத்திலுள்ள மாதகல் இளவாலைப் பண்டத்தரிப்பு சில்லாலை முதலிய இடங்களிலுள்ள 72 பிள்ளைகளுக்கு இன்று சனிக்கிழமை காலை 7.30 மணிக்கு திருப்பலியின் போது யாழ். புதிய ஆயர் கலாநிதி தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகையால் மானிப்பாய் புனித அந்தோனியார் ஆலயத்தில் வைத்து முதல்நன்மை வைபவம் நடைபெறவுள்ளது. (59)


## வரி விளம்பரம்

### FOR SALE

Bandages Available in Arthavan Pharmacy Kaithady. (C-6980)

### சூரபன்மன் வதைபடலம்

இலக்கிய அறிவற்றவர்களுக்கென, இலகுவில் கற்றுக்கொள்ள வேண்டுமென்பதற்காக திரு. வ. சிவராசசிங்கத்தினால் உரை எழுதப்பட்ட இந்நூல் யாழ் நகரின் எல்லாப் புத்தகக் கடைகளிலும் கிடைக்கும் பிரதி ரூபா 75/-. (எ 2596)

### வைத்தியம்

செங்கண்மாரி, குடற்புண், தொய்வ, வாதரோகங்கள், வலிப்புநோய், பீநிசம், தலையிடி, தலைசாலவியல், சருமநோய்கள், மாதவிடாய்க்குத்து, இரத்தப்போக்கு, வெள்ளைக்கசிவு, கருவழிதல், மகப்பேறின்மை, வீரியக்குறைவு மூலவியாதிகள். மூத்திரரோகங்களில் பிரபலமானவர் சகல வியாதிகளையும் குணப்படுத்துவார். வேலணை வைத்தியர் சி. இராசரத்தினம், 121, 2-ம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். (சி-6954)

### நுளம்பு குத்துகிறதா?

பொன்னின் குழல் ஊதி வந்து உங்கள் பொன்னான மேனியில் ஊசி போடுகிறதா? ஒன்று செய்யுங்கள், சாம்பிராணி புகைப்பது போல மில்க்வைற் நீம் தூபத்தைப் புகைத்துப் பாருங்கள் அண்ணா கோப்பிக் கடைகளிலும் கிடைக்கும். —மில்க்வைற், யாழ்ப்பாணம். (எ- 2601)

### சாயிபாபா-67வது ஜயந்தி வெளியீடுகள்

சாயிபாபா ஸ்ரீக்கேர்ஸ். பகவான் ஸ்ரீசத்யசாயிபாபாவின் நான் யார்? நான் கடவுள் ஆத்மதத்துவஞான விரிவுரைகள் ரூ. 15/- (நூலாசிரியர் சத்தியதாஸன்) கிருஷ்ணசாமி, மகிமிலன் புத்தகசாலைகள், யாழ்ப்பாணம். (சி- 6988)

### தவறிவிட்டது

ஞா. அருளானந்தசிங்கம் என்பவருடைய தேசியஅடையாள அட்டை இலக்கம் 451972910Vம் பாசும் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழே குறிப்பிட்டுள்ள விலாசத்தில் ஒப்படைக்கவும் இல: 36/4, லோட்டஸ் வீதி, வண்ணார்பண்ணை. (சி-6989)

### வகுப்புகள்

German & English Languages — ஜேர்மனியில் பல்கலைக் கழக மேற்படிப்புகளை தொடர்வதற்கு உதவுமுகமாக புதிய வகுப்புகள் ஆரம்பமாகின்றன. ஜேர்மன் பல்கலைக் கழக விலாசங்கள் பெற்றுக் கொள்ளலாம் தொடர்புகொள்க;- S Sornalingam Secretary, German Cultural Association, 4 Gopal Lane Vannarponnai Jaffna (மனோகரா தியேட்டர் அருகாமையில்). (சி- 6990)

### வினாத்தாள்

(ஆண்டு 4 முதல் ஆண்டு 11)

எமது நிறுவனத்தால் நடாத்தப்பட்ட 3-ம் தவணைப் பரீட்சை (சகல பாடம்) வினாத்தாள்களையும், ஆண்டு 6 அனுமதி, ஆண்டு 5 புலமைப் பரிசில் வினாத்தாள்களையும் பெற்றுக்கொள்ளலாம். புதிய கல்வி நிலையம், 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (சி-6991)


## வரவேற்பு விழாவும் பிரிவுபசார வைபவமும்

(மன்னார்)

மன்னார் மறைவட்ட இரண்டாவது புதிய ஆயருக்கும், யாழ் மாவட்டத்திற்கு மாற்றலாகிச் செல்லும் மன்னாரின் முதல் ஆயருக்கும் வரவேற்பும் சேவை நலன் பாராட்டும் மன்னாரில் கிறிஸ்தவர்களாலும், பொதுமக்களாலும் அரச தனியார் ஸ்தாபனங்களினாலும் நடத்தப் பட்டது.

இவ்வைபவத்தில் புதிய ஆயரும், மாற்றலாகிச் செல்லும் ஆயரும் புனித மரியன்னை ஆலய முன்றலில் வைத்து வரவேற்கப்பட்டு மாலை 5-30 மணியளவில் புனித செபஸ்ரியார் பேராலயத்தில் மன்னார் மறை வட்டத்தைப் பொறுப்பேற்கும் திருநிலைச் சடங்கு நடைபெற்றது. இதில் இரு ஆயர்களுடன் இணைந்து 30 குருமார் கூட்டுத்திருப்பலி ஒப்புக்கொடுத்தனர். பிற்பகல் 7-00 மணியளவில் புனித செபஸ்ரியார் பேராலய திறந்த வெளியரங்கில் அதிவந்தனைக்குரிய கலாநிதி இராயப்பு யோசப் ஆண்டகை அவர்களுக்கு வரவேற்பும், 11 ஆண்டுகளாக மன்னார் மறைவட்டத்தில் அரும்பணியாற்றி யாழ் மறை வட்டத்திற்கு மாற்றலாகிச்செல்லும் அதிவந்தனைக்குரிய கலாநிதி தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை அவர்களுக்கு பிரிவுபசார வைபவமும் ஒருங்கே நடாத்தப்பட்டது.

வரவேற்பு பிரியாவிடை வைபவத்தில் குரு முதல்வர் அருட்திரு சேவியர் குருஸ அடிகளாரும், புனித. செபஸ்ரியார் பேராலயப் பங்குத் தந்தை அருட்திரு ஜே பி. தேவராஜா அடிகளாரும், மேலதிக அரசாங்க அதிபர் திரு எஸ். எம் குருஸ் உட்பட பங்கு மக்கள் பிரதிநிதிகள் சிலரும் உரையாற்றினர்.

## வீதி விளக்குகள்

(கொழும்புத்துறை)

கொழும்புத்துறை மேற்கு இந்து இளைஞர் மன்றத்தின் ஆதரவில் இப்பகுதிகளில் உள்ள பிரதான சந்திகளில் வீதி விளக்குகள் அமைக்கப் படவுள்ளன. (154)

## புதியவர்களை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஏற்பட்டிருப்பதையடுத்தே இந்தக் கோரிக்கை விடுக்கப் பட்டிருக்கிறது.

1987ல் ஆண்டு நாடாளுமன்றத்தில் குண்டுவெடிப்புச் சம்பவமொன்று இடம்பெற்ற போது மாவட்ட அமைச்சர் கீர்த்தி அபேயரட்ண கொல்லப்பட்டார். அப்போதைய பாதுகாப்பு அமைச்சர் லலித் அத்துலத்முதலி படுகாயமடைந்தார். முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தன தற்போதைய ஜனாதிபதி ஆர் பிரேமதாஸா உட்பட பல அமைச்சர்கள், எம். பிக்கள் அந்தச்சம்பவத்தில் அப்போது மயிரிழையில் உயிர் தப்பினர் என்பது தெரிந்ததே. (இ)

## இராசி பலன்

21-11-1992

(தமிழுக்கு கார்த்திகை 06)

சனிக்கிழமை

துவாதசி மு. இ. 7-19 வரை, அத்தம் மு. ப. 8-44 வரை. மரணயோகம், இராகு காலம் காலை 9-10 முதல 10-40 வரை. சுபநேரம் மாலை 3-10 முதல் 4 40 வரை.

மேடம்: செலவாக்கு விவகாரங்களில் வெற்றி, குடும்ப சுகம்.

இடபம்: தொழில் நஷ்டம், பணமுடை, மறைமுகத் தொல்லை

மிதுனம்: முயற்சி பலனளிக்காமை, குடும்ப சுகம், அலைச்சல்.

கடகம்: தொழில் லாபம், எதிர்பார்த்த வெற்றி, சந்திப்பு.

சிங்கம்: மனக்குறை, சகோதரர் விரோதம், சுபச்செலவு.

கன்னி: தெய்வ சிந்தனை, மனக்களிப்பு, பயண அனுகூலம்.

துலாம்: ஒத்துழையாமை, கடன் சுமை, புத்திரர் கவலை.

விருச்சிகம்: சங்கடமான நிலை, வீண் சிரமம், காரியத தடை.

தனுசு: காரிய அனுகூலம், அதிகாரிகள் உதவி, மன நிறைவு.

மகரம்: குடும்ப விவகாரம், உடல் பலவீனம், பெண்பகை.

கும்பம்: கணவரின் அலட்சியம், வீண் பயம், சஞ்சலம்.

மீனம்: தொழில் முன்னேற்றம், சந்தோஷம், சன்மானம்.

— ஜோஸ்யர்

கரபந்தாட்டம்

## சிப்பித்தறை சாம்பியன்

(யாழ்ப்பாணம்)

யாழ். சன சமூக நிலையங்களின் சம்மேளனத்தினால் ஆண்டு தோறும் சன சமூக நிலையங்களுக்கு இடையே நடாத்தப்பட்டுவரும 'ஓவர் கேம்' முறையிலான கரபந்தாட்டப் போட்டியில் இவ்வருடம் சிப்பித்தறை வள்ளுவன் சனசமூக நிலையம் சாம்பியன் கிண்ணத்தை தனதாக்கிக் கொண்டது.

இப்போட்டித் தொடரின் இறுதி ஆட்டம் வள்ளுவன் ச. ச. நிலைய விளையாட்டரங்கில் இடம் பெற்ற பொழுது நாயன்மார்கட்டு பாரதி சன சமூக நிலைய அணியை சிப்பித்தறை வள்ளுவன் ச. ச. நிலைய அணி இருநேர் செற்றுகளில் 15 — 12, 15 — 8 என்ற புள்ளிகள் அடிப்படையில் தோற்கடித்தது. நடுவராக சே. நாகேந்திரன் கடமையாற்றினார்.

இவ் நிகழ்ச்சியில் யாழ். கரபந்தாட்ட சம்மேளனத்தின் தலைவர் கப்ரின் டீ ஏ. எம் குணசிங்கம் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு பரிசில்களை வழங்கினார். (வி)

## 9 தமிழ் இளைஞர்களை சரணடைய உத்தரவு

(சென்னை)

சென்னையில் இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு தேசிய ஒருமைப்பாடு மாநாட்டு சபைக் கூட்டம் நடக்கும் நேரத்தில், வெடி வைத்து அதனைத் தகர்க்க முயன்றதாகச் சந்தேகித்த ஒன்பது தமிழ் இளைஞர்களும் குற்றவாளிகளாகக் காணப்பட்டுள்ளனர் என்று தனி மனித நீதிமன்ற நீதிபதி சித்திக் தெரிவித்துள்ளார்.

இவர்கள் அடுத்த மாதம் 10ம் திகதிக்கு முன்பு சரண் அடையவேண்டும் என்றும் அவர் தமது தீர்ப்பில் மேலும் கூறியுள்ளார். (சு)

## கொள்ளைச் சந்தேகநபர் பொலிஸாரால் கைது

(கொழும்பு)

14 வருடங்களாக பொலிசாரால் தேடப்பட்டுவந்த கொள்ளைச் சந்தேகநபர் ஒருவர் வெள்ளவத்தையில் வைத்து அண்மையில் பொலிசாரால் கைதுசெய்யப்பட்டார். இவரது மனைவியும் மற்றொரு நபரும் கைதுசெய்யப்பட்டுள்ளதாக பொலிசார் தெரிவித்துள்ளனர்.

இவரிடமிருந்து 85 சவரன் தங்க நகைகள், வீடியோ டெக், ரெலிவிசன் பெட்டிகள் விலையுயர்ந்த கைக்கடிகாரங்கள், ஹ-ஏஸ்-வான் ஆகிய பெறுமதி மிக்க பொருட்கள் மீட்கப்பட்டதாகவும் பொலிசார் தெரிவித்துள்ளனர். (க)

## 100 தொண்டர் ஆசிரியர்க்கு மன்னாரில் நியமனம்

(மன்னார்)

மன்னாரில் 100 தொண்டர் ஆசிரியர்களுக்கு ஆசிரிய நியமனம் வழங்கப்பட்டுள்ளதாக கல்வித் திணைக்களம் தெரிவித்துள்ளது.

ஆசிரியர் தெரிவுப் பரீட்சை மூலம் மேற்படி நியமனம் வழங்கப்பட்டதாகவும், முதல் கட்டமாக 39 பேருக்கும், 2ம் கட்டமாக 61 பேருக்கும் ஆசிரிய நியமனம் வழங்கப் பட்டதாகவும் கல்வித் திணைக்களம் மேலும் தெரிவிக்கின்றது. (க)

## எக்ஸ்போ 92 கண்காட்சி 83 கோடி ரூபா பெறுமதி வர்த்தக விசாரணைகள்

(கொழும்பு)

எக்ஸ்போ 92 கண்காட்சியில் 83 கோடி பெறுமதியான வர்த்தக விசாரணைகள் கோரிக்கைகள் எழுப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

46 நாடுகளைச் சேர்த இரண்டாயிரத்து ஐந்நூற்றிற்கு மேற்பட்ட முதலீட்டாளர்களையும், வர்த்தகர்களையும் இக்கண்காட்சி கவர்ந்துள்ளதாக கூறப்படுகிறது. மேலும் ஆயிரம் வெளிநாட்டவர்கள் இக்கண்காட்சியில் கலந்து கொள்ளலாம் என்று எதிர்பாக்கப்படுகிறது.

ஜனாதிபதி பிரேமதாஸா நேற்று வரை இருதடவை இக்கண்காட்சிக்கு நேரில் விஜயம் செய்துள்ளார்.

தேயிலை, இறப்பர், தெங்குப் பொருள்கள், ஆயுர்வேத மருந்துவகைகள் கைப்பணிப் பொருட்கள், இரத்தினக்கல், ஆபரணங்கள், பழவகைகள், மரக்கறி உட்பட பலபொருட்கள் இக்கண்காட்சியில் வைக்கப்படடுள்ளது.

## கர்நாடகத்திற்கு புதிய முதல்வர்

(பெங்களூர்)

கர்நாடகத்தின் புதிய முதலமைச்சராக திரு வீரப்பமுதலி தெரிவு செய்யப்பட்டிருக்கின்றார். இவருடைய பெயரை முன்னாள் முதலமைச்சர் திரு. பங்காரப்பா முன்மொழிய, கல்வித்துறை அமைச்சர் திரு. ரங்கனாத் வழிமொழிந்தார். (சு)


### விற்பனையாகிறது

★ 1993-ம் வருட இரகுநாதையர் மாதக் கலண்டர்

★ 1993-ம் வருட தினக்குறிப்பு

எங்கும் கிடைக்கும்.

சோதிடவிலாச புத்தகசாலை,
கொக்குவில் சந்தி, கொக்குவில்.
(ஏ-2598)


**மண்மீட்கப் போராடும் நாங்கள் மண் காக்கும் மரங்களை காப்போம்**

# மாவீரர் வாரத்தின் பொதுவான செயற்பாடுகள்

தேசிய கொடியேற்ற வைபவம் இன்று 21-ம் திகதி காலை 9-00 மணிக்கு, சகல பாடசாலைகளிலும், சகல திணைக்களத் தலைமையகங்களிலும், அரச செயலகத்திலும், உப அரச அதிபர் செயலகங்களிலும், பலநோக்குக் கூட்டுறவுச் சங்க தலைமையகங்களிலும், சனசமூக நிலையங்களிலும் நடைபெறும்.

பாடசாலை அதிபர்கள், உப அதிபர்கள், திணைக்களத் தலைவர்கள், உதவி அரச அதிபர்கள், அரச அதிபர்கள், பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் தலைவர்கள் ஆகியோர் கொடிகளை ஏற்றிவைப்பர்.

பிரதான கொடியேற்றும் வைபவம் பாடசாலைகளை மையமாகக் கொண்டு நடைபெறும். இக்கொடியேற்ற வைபவத்திற்குப் பாடசாலையைச் சூழவுள்ள பொதுமக்கள், பொதுஸ்தாபனங்களைச் சேர்ந்த யாவரும் கலந்து கொள்வார்கள்.

கொடியேற்றத்தைத் தொடர்ந்து மௌனஞ்சலி, மலராஞ்சலிக்குப் பின்னர் பாடசாலைகளில் காலை 9-00 மணி தொடக்கம் 10-00 மணி வரை மாவீரர் தின நிகழ்ச்சிகள் நடைபெறும் இந்நேரத்தில் மாவீரர் நினைவுப் பேச்சு 30 நிமிடங்களுக்கு கலை நிகழ்ச்சிகள் என இடம் பெறலாம் இந்நிகழ்ச்சிகள் யாவும் ஒரு மணித்தியாலம் மட்டுமே உள்ளடக்கியதாக இருத்தல் வேண்டும்.

22-11-92 அன்று ஆசிரியர்கள், மாணவர்கள் அப்பாடசாலையைச் சூழவுள்ள பொது மக்கள் ஆகியோரால் சிரமதான நிகழ்வுகள் மேற்கொள்ளப்படும்.

பாடசாலையில் கல்வி கற்று மாவீரரானவர்களின் படங்களைப் பாடசாலைகளில் வைத்துக் கௌரவிக்கப்படல் வேண்டும்.

பாடசாலை மாணவ மாணவிகள். மாணவர் இயக்கம் மகளிர் அமைப்பு ஆகியோர் நடத்தும் நிகழ்ச்சிகளுடன் அரசியற் பொறுப்பாளரும் இணைந்து பொதுமக்களின் அல்லது பொதுஸ்தாபனத்தின் கலைநிகழ்வை ஒரு குறிப்பிட்ட நாளில், குறிப்பிட்ட நேரத்தில் நடாத்தவேண்டும்.

## பெற்றோர் கௌரவிப்பு

ஒவ்வொரு பிரிவ ரீதியாக இடங்கள் தெரிவு செய்யப்பட்டு. அவ்விடங்களுக்கு மாவீரர்களின் பெற்றோர்கள் அழைத்து வரப்பட்டு உணவு. இடைநேர தேநீர், சிற்றுண்டிகள், இராப்போசனம் வழங்கப்படவேண்டும். பிற்பகலில் பெற்றோர்கள் நன்முறையில் கௌரவிக்கப்பட்ட பின் கலைநிகழ்வுகள் இடம்பெற வேண்டும் பின்னர் அஞ்சலி கீதமாக (30 நிமிடம் ஒருவர் இசைக்க, பெற்றோர்கள் சேர்ந்து இசைக்கவேண்டும். அதன் பின்னர் மாவீரர் சுடரேற்றத்துக்காக பெற்றோர்கள் மாவீரர் துயிலும் இல்லங்களுக்கு அழைத்து வரப்பட்டு நள்ளிரவு 12 மணி 01 செக்கன் தொடக்கம் 12-02 நிமிடம் வரை மணி ஒலிக்க சமகாலத்தில் அனைத்து மக்களும் மௌனஞ்சலி செலுத்தி 12-02 நிமிடத்திற்கு சுடர் ஏற்று வைபவம் இடம்பெற வேண்டும்

26ம் திகதி நள்ளிரவு தாண்டும் நேரத்தை தமிழீழ மக்கள் அனைவரும் எதிர்பார்த்துக்காத்திருப்பார்கள். 12மணி 01 நிமிடத்துக்கு தமிழீழமெங்கும் சமகாலத்தில் அனைத்து ஆலய, தேவாலய மணிகளும் இரண்டு நிமிடங்கள் ஒலி எழுப்பும், இந்த நேரத்தில் எல்லா, மக்களும் மௌனமாக அஞ்சலி செலுத்துவார்கள்.

இந்த நினைவு ஒலி எழுப்பப்படும்போது நினைவொலிக்காக விழித்திருந்து இரண்டு நிமிடம் மௌன அஞ்சலி செலுத்துவது அனைத்து மக்களினதும் கடமையாகும். நினைவு ஒலி எழுப்பப்படும்போது வீதியால் பயணம் செய்பவர்கள் நடந்தாயினும் வாகனத்திலாவது போனால் உடன் நின்று அந்த இரண்டு நிமிடங்களும் அந்தந்த இடங்களிலேயே மௌன அஞ்சலி செய்தல்வேண்டும்.

யாழ். பிராந்தியம் தவிர்ந்த மற்றைய பிராந்தியங்களில் சரியாக 12 மணி 2 நிமிடமாகும் போது ஒவ்வொரு பிரதேசத்திலுமுள்ள மத்திய இடத்திலும். யாழ். பிராந்தியத்தில் மாவீரர் துயிலுமில்லங்களிலும் மாவீரர் சுடரேற்றும் வைபவம் இடம் பெறும் ஒவ்வொரு மாவட்டத்திலும் வீரச்சாவெய்திய மாவீரர்கள் அனைவருக்குமான சுடரேற்றும் பந்தங்கள் மைதானத்தில் நாட்டப்பட்டிருக்கும்.

மைதான நடுவில் சற்று உயரமான பெரிய சுடர் நாட்டப்பட்டிருக்கும் மக்கள் வெள்ளம் உணர்வுக்கொந்தளிப்போடு மைதானத்தைச் சுற்றி நின்று தியாகங்களை நெஞ்சில் நினைத்திட தீச்சுடர் ஏற்றப்படும். அமைப்பின் முதன்மையானவர்கள் மத்திய சுடரை ஏற்ற மாவீரரின் பெற்றோர்கள், உரித்துடையோர்கள் தீச்சுடரை சமகாலத்தில் ஒவ்வொரு இல்லங்களின் வாசலிலும் மாவீரர் சுடரொளியை மக்கள் அனைவரும் ஏற்றுவர்.

சுடரானது சுவாலை விட்டெரியும். ஒவ்வொரு சுடர்களிலும் மாவீரர்களின் முகங்களும் பிரகாசிக்கும். தமிழீழம் முழுவதும் சுடரொளி ஒளிகிப் பரவும். மக்கள் குமுறி எழுந்து கண்ணீர்விட்டு நிற்க தியாகிகளின் காவியங்கள் ஒவ்வொரு தமிழீழ மக்களின் உணர்வுகளிலும் மீட்டப்படும்.

சுடர் ஏற்றி தியாக தீபங்கள் இவை என்று கூறத்தக்கதாக நினைவுகூரப்பட வேண்டும். வானத்தில் மின்னும் நட்சத்திரங்கள் போல தமிழீழம் எங்கும் மாவீரர் சுடர்கள் இந்நேரத்தில் எங்கும் ஒளிரவேண்டும் சிட்டி விளக்கேற்றக் கூடிய இடங்களில் தொகையான சிட்டி விளக்குகள் ஏற்றி நினைவு கூரலாம் வாசலில் தீப்பந்தங்கள் எரியும் பொது இடங்களில் பெரிய சுடர்களை ஏற்றியும் நினைவுகூர வேண்டும்.

இந்தச் சுடரேற்றும் வைபவமானது விடுதலைப்பாதைக்கு உறுதியையும் உணர்வையும் கொடுத்து நிற்கின்றது.

## பொதுக்கூட்டங்கள்

பொதுக்கூட்டங்கள் 27-ம் திகதிஅன்று பி. ப. 4 மணிக்கு அணிவகுப்பு நிகழ்ச்சி தொடங்கிஅதன்பின் பொதுக்கூட்டம் ஆரம்பித்து கலை நிகழ்ச்சியும் இடம்பெறும்.

## மரம்நாட்டுதல்

மேலும் மாவீரர் வாரத்தில் ஒவ்வொரு வட்டத்திற்கும் கூட்டம் ஒழுங்கு செய்யப்பட்டு இரவு 7 30 மணிக்கு தொடங்கி முடிவில் கலை நிகழ்ச்சியும் இடம்பெறவேண்டும்.

மாவீரர்களின் நினைவாக பயன்தரும் மரவகைகளை நாட்டும் வைபவம் பருவகாலத்தில் இடம் பெறவேண்டும்.

## கொடி இறக்கம்

இந்நிகழ்ச்சி27-திகதி அன்று மாலை 7மணிக்கு இடம்பெற வேண்டும். கூட்டங்கள் நடைபெறும் இடங்களில் கலை நிகழ்ச்சிகள் முடிந்த பின்னர் தேசியக்கொடி இறக்கப்படல் வேண்டும்.

## வீதிகளுக்குப்பெயர் சூட்டல்

வீதிகள், மண்டபங்களுக்குப் பெயர் சூட்டல் நிகழ்ச்சிகள் 23 தொடங்கி 25 வரையும் இடம்பெற வேண்டும்.

1992 மாவீரர் நாள் குழு

---

# மாவீரர் வார ஏற்பாடுகள்

## சந்திகளில் வளைவுகள்

(பண்டத்தரிப்பு)

மாவீரர் வாரத்தை முன்னிட்டுச் சுன்னாகம் சந்தைக்குச் சமீபமாகவுள்ள சந்தியில், அலங்கார வளைவு ஒன்று நிறுவப்பட்டுள்ளது உடுவில், மானிப்பாய் ஆகிய இடங்களிலுள்ள சந்திகளிலும் அலங்கார வளைவுகள் நிறுவப்பட்டுள்ளன.

இதேவேளை இப்பகுதிகளில் உள்ள பாடசாலை மாணவர்கள், பல நோக்குக் கூட்டுறவுச் சங்க ஊழியர்கள் மற்றும் பொது நிறுவனங்களைச் சேர்ந்த ஊழியர்கள், சனசமூக நிலையங்களின் உறுப்பினர்கள் ஆகியோர் தத்தம் பகுதிகளில் சிரமதானப் பணிகளிலும். துப்பரவுப் பணிகளிலும் ஆர்வமுடன் ஈடுபட்டு வருவதைக் காணக்கூடியதாக இருக்கிறது. [72]

## மாணவர் சிரமதானம்

(யாழ்ப்பாணம்)

மாவீரர் நினைவாகக் குடாநாட்டின் பல்வேறு இடங்களிலும் சிரமதானப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

நேற்றுமுன்தினம் யாழ். மத்திய கல்லூரி மாணவர்களும், திருநெல்வேலி சைவ வித்தியா விருத்திச் சங்கச் சிறுார்களும் சிரமதானப் பணிகளில் ஈடுபட்டனர். [159]

## சிரமதானம்

(பண்டத்தரிப்பு)

மாவீரர் வாரத்தை முன்னிட்டு மானிப்பாயில் உள்ள வலி-தென்மேற்குப் பிரதேச சபை ஊழியர்கள், பிரதேச சபை அலுவலகப் பகுதியையும், நூல்நிலையப் பகுதியையும் சிரமதானம் மூலம் துப்புரவு செய்துள்ளனர். (72)

## வீதிகள் துப்பரவு

(அரியாலை)

மாவீரர் வாரத்தையொட்டி 18ம் திகதி காலையிலிருந்து பகல் 10-00 மணி வரை பல இடங்களில் சிரமதானப் பணி நடைபெற்றது.

அரியாலை சாம்சன் முகாம் சுற்றாடல் துப்புரவு செய்யப்பட்டுள்ளது. யாழ். தபாலகத்திலிருந்து டேவிற் வீதிச் சந்தி வரை. யாழ்-தீவகத் தபாலக ஊழியர்களால் சிரமதானப் பணி மூலம் வீதிகள் துப்பரவுசெய்யப்பட்டன. (59)

## அலங்கார வளைவு

(அரியாலை)

மாவீரர் வாரத்தையொட்டி யாழ். மடம் வீதிப் பக்கமாக மாபெரும் அலங்கார வளைவு ஒன்று நிறுவப்பட்டுள்ளது. இவ்வளைவு உள்ளூர் உற்பத்திப்பொருட்கள் பனைமட்டைகளால் அலங்கரிக்கப்பட்டுள்ளது. [59

## சந்திகளில் பந்தல்கள்

(கொழும்புத்துறை)

மாவீரர் தினத்தை முன்னிட்டு இணுவில், சுன்னாகம், மல்லாகம், மருதனார்மடம், தாவடிச் சந்திகளில் பந்தல்களும், அலங்கார வளைவுகளும் அமைக்கப்பட்டுள்ளன

யாழ். மாவட்டத்தின் சகல பகுதிகளிலும் இது போன்று பந்தல்கள், வளைவுகள் அமைப்பதிலும், மரம் நாட்டு விழா, வீதிகள் சிரமதானப பணிகள் உட்படப் பல முன்னேற்றமான செயல் திட்டங்களைப் பொது அமைப்புக்கள், பொதுமக்கள் ஒருங்கிணைந்து செய்து வருவது குறிப்பிடத்தக்கது. [154]

## மரம் நாட்டும் வைபவம்

(கொழும்புத்துறை)

கொழும்புத்துறை மணியம் தோட்ட கலைமகள் சனசமூக நிலையத்தின் ஆதரவில் பாரிய சிரமதானப்பணி, மரம்நாட்டு விழா இடம்பெறவுள்ளது.

நிலையத்தில் விளையாட்டு மைதானம், வீதிகள் சிரமதானப்பணி மூலம் செப்பனிடப்படவுள்ளதாகவும், வீதியோரங்களில் மரம் நாட்டு வைபவமும் மாவீரர் தினத்தினை முன்னிட்டு இடம்பெறவுள்ளது. (154]

## ஊழியர் சிரமதானம்

(கொழும்புத்துறை)

யாழ். தேசிய வீடமைப்புத் திணைக்களத்தில் செயல்பட்டு வரும் சகல திணைக்கள ஊழியர்களும் கடந்த 19ம் திகதி வியாழக்கிழமை காலை தொடக்கம் மாவீரர் எழுச்சி வாரத்தை முன்னிட்டுச் சுற்றாடலைச் சிரமதானப் பணி மூலம் துப்பரவு செய்துள்ளனர்.

இங்கு கடமையாற்றும் அரச திணைக்களங்களைச் சேர்ந்த பெரும்பாலான ஊழியர்கள் இச்சிரமதானம் பணியில் பங்குபற்றி இருந்தனர். (154)

---

★ தமிழீழ மாவீரர் நாள் — 1992

## மாவீரர்களே!

பொன்முடி சூடிடும் கனவினை எறிவாய் - வா
புலிகளின் பாசறை; மகிமைகள் பெறுவாய்
கண்களில் விடுதலை நெருப்பினைக் கொடுத்து - போர்
களத்தினில் ஆடியெம் எதிரியை விழுத்து.

— தமிழீழ மாவீரர் பணிமனை

---

## இதயக் கோயிலில் பூசிக்கப்பட வேண்டியவர்கள்

எமது வீர விடுதலை வரலாறு இந்த மாவீரர்களின் இரத்தத்தால் எழுதப்பட்டிருக்கின்றது. இவர்களது இறப்புக்கள் அர்த்தமற்ற இழப்புக்கள் அல்ல, இந்த வீரர்களின் சாவுகள் எமது சரித்திரத்தையே இயக்கும் உந்து சக்தியாக, எமது போராட்டத்தின் உயிர் மூச்சாக எமது போராளிகளின் உறுதிக்கு உத்வேகமளிக்கும் ஊக்குசக்தியாக அமைந்துவிட்டன. இந்த மாவீரர்கள் காலத்தால் சாகாதவர்கள். சுதந்திர சிற்பிகள். எமது மண்ணிலே ஒரு மாபெரும் விடுதலை எழுச்சிக்கு வித்திட்டுச்சென்ற வீரமறவர்கள். எமது இனத்தின் சுதந்திரத்திற்காக, கௌரவத்திற்காக பாதுகாப்பிற்காக தமது இன்னுயிரை ஈந்துள்ள இந்த மகத்தான தற்கொடையாளர்கள் (தியாகிகள்)காலம் காலமாக எமது இதயக்கோவிலில் பூசிக்கப்பட்ட வேண்டியவர்கள்.

ஒரு விடுதலை வீரன் சாதாரண வாழ்க்கையை வாழும் ஒரு சாதாரண மனிதப்பிறவி அல்ல. அவன் ஓர் இலட்சியவாதி. ஓர் உயரிய இலட்சியத்திற்காக வாழ்பவன், தனக்காக வாழாமல் மற்றவர்களுக்காக வாழ்பவன். மற்றவர்களின் விடிவுக்காக, விமோசனத்திற்காக வாழ்பவன். சுயநலமற்ற பற்றற்ற அவனது வாழ்க்கை உன்னதமானது, அர்த்தமுள்ளது. சுதந்திரம் என்ற உன்னத இலட்சியத்திற்காக அவன் தனது உயிரையும் அர்ப்பணிக்கத் துணிகிறன். எனவே விடுதலை வீரர்கள் அபூர்வமான மனிதப் பிறவிகள், அசாதாரணமான பிறவிகள்.

— தலைவர் திரு. வே. பிரபாகரன்

---

## பல்வேறு போட்டிகள் நடத்த ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

மாவீரர் வாரத்தில் யாழ்ப்பாணம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் பல போட்டிகளை நடத்தவுள்ளது. கட்டுரைப் போட்டி. உதைபந்தாட்டம், சங்கீதக் கதிரை (இசைச் சுற்றுப் போட்டி), கயிறு இழுத்தல் முதலான போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

பணிப்பாளர், பணியாளர்களுக்குப் புறம்பாகவும், கிளைக் குழு உறுப்பினர்களுக்கும் புறம்பாகவும் 24ம் திகதி நடைபெறுமென்றும், 23ம் திகதிக்கு முன்னர் பெயர்கள் பதிவு செய்யப்படவேண்டும் என்றும், ஆண் பணியாளர்களுக்கான உதைபந்தாட்டப் போட்டி 25ம் திகதி நடைபெறுமென்றும், அன்றைய தினம் 10 மணிக்கு முன்னர் பெயர் பதிவு செய்தல்வேண்டுமென்றும் பெண் பணியாளர்களுக்கான இசைச் சுற்றுப் போட்டி 26ம் திகதி நடைபெறுமென்றும், பெண் பணியாளர்களுக்கும், கிளைக் குழு மாதர் அணிக்கும் இடையிலான கயிறு இழுத்தல் போட்டி 26ம் திகதி நடைபெறுமென்றும் யாழ். பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தால் அறிவிக்கப்பட்டுள்ளது.

---

## தூய மாவீரரைத் துதிசெய்வோம்

வீசுபுயல் மழையென்றும் நோக்காது
விழிமூடித் துயில்வரினும் தூங்காது
ஊசியதாய்க் குத்துபனிக் குளிரினிலும்
ஊண்மறந்து எமக்காகப் போராடி
காசு பணம் கருதாது கருத்துடனே
காத்திடவே ஈழமதின் எல்லையினை
தூசியதாய் ஆவிதனைத் துறந்துவிட்ட
தூய மாவீரர்களைத் துதிசெய்வோம்

நாயன்மார்கட்டு "முருகநேசன்"

★ பாதுகாப்பு படையினரால்

# கொழும்பில் பயணி விடுதிகள் அனைத்தும் சுற்றிவளைப்பு

(கொழும்பு)

கொழும்பு திம்பிரிகசாயவில் நேற்று இடம்பெற்ற துப்பாக்கி சூட்டுச்சம்பவத்தை தொடர்ந்து கொழும்பிலுள்ள பயணிகள் விடுதிகள் அனைத்தையும் பொலிஸாரும் இராணுவத்தினரும் சுற்றிவளைத்து சோதனையிட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

குறிப்பாக கொழும்பு விடுதிகளில் தங்கியுள்ள ஆண்களையும், இளைஞர்களையும் பொலிஸார் துருவித்துருவி விசாரணை செய்தார்களாம்.

விடுதிகளில் சரியான பதிவில்லாமல் தங்கிருந்த அனைவரையும் பொலிஸார் கைது செய்து விசாரணைக்குட்படுத்தியதாகவும் சந்தேகத்துக்கிடமாக வீதிகளில் நடமாடிய அனைவரையும் பொலிஸார் விசாரணைக்குட்படுத்தியதாகவும் கூறப்படுகின்றன. (வி)

## உணவுப்பொருட்கள்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இந்த அனுமதி மறுப்பு என்பதை கூட்டுப்படைத்தலைமையகம் அறிவிக்கவில்லை. இது குறித்து அரசு அதிகாரிகள் பலர் கவலை கொண்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (158)

# இளைஞர் 'மரணம்

(யாழ்ப்பாணம்)

கடந்த 11ம் திகதி மண்டைதீவுக்கடலில் வைத்து படையினரின் துப்பாக்கிப்பிரயோகத்திற்கு இலக்கான குருநகரைச்சேர்ந்த சுரேஸ் என்ற 20 வயது இளைஞர் நேற்று யாழ். போதனா வைத்தியசாலையில் மரணமானார். 159

## புதியபாதுகாப்பு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

காப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படவிருக்கின்றன.

இராணுவ கொமாண்டோ படையினரும் விசேஷ அதிரடிப்படையினரும் மற்றும் விமான கடற்படையின் விசேஷ பிரிவினரும் இந்தப் பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்படுவர். (இ)

தேசிய அடையாள அட்டை:

# முறைப்பாடு செய்யும் காலம் நீடிப்பு

(நல்லூர்)

தேசிய அடையாள அட்டைகளைத் தவறவிட்டவர்கள் தொலைத்தவர்கள் அவ்வவ் கிராமசேவையாளர்களிடம் முறைப்பாடு செய்வதற்காக மேலும் ஆறு மாதங்கள் நீடிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் 1972, 1973-ம் ஆண்டுகளின் அடையாள அட்டைகளைப் பெற்றுக்கொண்டவர்கள் அவற்றைப் புதுப்பிப்பதற்குசட்டப்படி இவ்வருட இறுதிவரை சந்தர்ப்பமளிக்கப்பட்டுள்ளது என ஆட்பதிவுத் திணைக்கள ஆணையாளர் யாழ். அரசாங்க அதிபர் திரு. கா. மாணிக்கவாசகரிடம் தெரிவித்துள்ளார்.

இதேவேளையில் பருத்தித்துறைக்கு வரவிருக்கும் குமண கப்பலில் தேசிய அடையாள அட்டை விண்ணப்பப்படிவங்களும் 3000 அடையாள அட்டைகளும் எடுத்துவரப்படவிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது. (158-161)

# இனப்பிரச்னைக்கு அரசியல் தீர்வே இறுதியானது - அமைச்சர் ஹமீத்

(கொழும்பு)

இனப்பிரச்னைக்கு அரசியல் தீர்வே இறுதியானது தெரிவுக்குழு இதனை ஆராய்ந்து வருகிறது என்று நீதி உயர்கல்வி அமைச்சர் ஏ. ஸி. எஸ். ஹமீத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் கூறியதாவது: இனப்பிரச்னைக்கு அரசியல் தீர்வு காண்பதிலே அரசாங்கம் உறுதிப்பாடு கொண்டுள்ளது தெரிவுக்குழு இதற்கான வழிவகைகளை ஆராய்ந்துகொண்டிருக்கிறது.

எனவே இனப்பிரச்னை தீர்விற்கு அரசாங்கத்தின் நிலைப்பாடு என்ன என்று எதிர்க்கட்சிகள் கேட்பதில் எவ்வித அர்த்தமுமில்லை என்றும் அவர் கூறினார். (ரி)

# உணவு நிலைமை ஆராய செயலகத்தில்இன்றுகூட்டம்

(மானிப்பாய்)

யாழ். மாவட்ட உணவு நிலைமைபற்றி ப. நோ. கூ. சங்கங்களுடன் ஆராய்வதற்கான கூட்டம் இன்று சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு யாழ். செயலகத்தில் நடைபெறவுள்ளது

இக்கூட்டத்திற்கு யாழ். மாவட்டத்திலுள்ள சகல ப. நோ. கூ. சங்கங்களின் பிரதிநிதிகளையும் தவறாது கலந்து கொள்ளுமாறு திட்டப்பணிப்பாளர் செ. பத்மநாதன் அறிவித்துள்ளார். (71)

## பரீட்சார்த்திகள் கவனத்திற்கு

(யாழ்ப்பாணம்)

அரச கட்டுப்பாட்டிலுள்ள வங்கிகளுக்கு மாவட்ட ரீதியாக ஆட்சேர்ப்பதற்கான போட்டிப் பரீட்சை 1990-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் வடக்கு-கிழக்கு உட்பட நாட்டின் சகல பகுதிகளிலும் நடைபெறும் என அறிவிக்கப்பட்டது.

எனினும் வடக்கு-கிழக்கில் இது நடைபெறவில்லை. இப் பரீட்சையில் தோற்ற விண்ணப்பித்த சகல பரீட்சார்த்திகளும் எதிர்வரும் 24ம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9 30 மணிக்கு யாழ். ஸ்ரான்லி வீதியிலுள்ள இலங்கை வங்கிக்கு பின்புறமாக கூடுமாறு கேட்கப்படுகின்றனர். (சி)

# குமாரியில் தபால்களை அனுப்பலாம்

(யாழ்ப்பாணம்)

குமாரி கப்பல் நாளை மறுதினம் திங்கட்கிழமை பருத்தித்துறையிலிருந்து கொழும்புக்குப் புறப்படவுள்ளது.

குமாரியில் தபால் பொதிகளை எடுத்துச் செல்வதற்கு கப்பல் அதிகாரிகள் சம்மதம் தெரிவித்துள்ளனர்.

இந்தக் கப்பலில் வெளியூர் தபால்களை அனுப்புவோர் அவற்றை நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணிக்கு முன்னதாக யாழ். பிரதம தபால் கந்தோரில் சேர்க்குமாறு வடமாகாண பிரதி தபால் அதியட்சகர் திரு. எஸ் எம். சேதுகாவலர் கேட்டுள்ளார். (159)

## மண்ணுக்காக

(1ம் பக்கத் தொடர்ச்சி)

துறந்து கடமையை மதித்தவர்கள். தம் வாழ்வைத் துச்சமென மதித்து மண்ணை மீட்டு மக்களை வாழவைக்கவேண்டும் என்ற கனவைச் சுமந்தவர்கள் தம் மரணத்தின் பின்பாவது மண்மீட்கப்படும் என்ற அசையாத நம்பிக்கைகொண்டவர்கள்.

தலைவரைத் தலைமைத்துவத்தைக் கண்டும் காணாமலும், விசுவாசித்தவர்கள், நேசித்தவர்கள், அசையாத நம்பிக்கை கொண்டவர்கள், கட்டுப்பட்டவர்கள், காலால் செய்யும் வேலையெனினும், மதிப்பின் மிகுதியால் தலையால் சுமந்து நிறைவேற்றியவர்கள். எதிரியின் பாசறைகளை, அரண்களை தகர்த்து, நிலைகுலையச்செய்து, அழித்தொழித்து, மீதப்பட்டோரை ஓடோட விரட்டியவர்கள். முகாம்களைத் தகர்த்தொழித்தவர்கள், அதியுன்னத சக்திவாய்ந்த ஆயுதங்களை, ரவைகளை, குண்டுகளை, சாதனங்களை, வாகனங்களை எதிரியிடமிருந்து பறித்தெடுத்தவர்கள்.

எங்களைப் பின்பற்றுங்கள், எம்முடன் இணையுங்கள், மண்ணைமீட்கப் போராடுங்கள் என்று வாலிபருக்கும், யுவதிகட்கும், ஏன் மக்களுக்குமே வழிகாட்டி இணைத்து, இணைய மாதிகைகளாகத் திகழ்ந்து மறைந்த மகான்கள் இம் மாவீரர்கள். அடிமை வாழ்வு, இடம் பெயர்ந்த அகதிவாழ்வு, தடைப்பட்ட பொருளாதாரத்தால் மக்களின் வாழ்க்கை நலிவு, இவையாவையும் கண்டு மனம் தளராது மார்க்கம் கண்டு, பொருளாதாரத்தில், விவசாயத்தில், தொழில்கள் வளர்ச்சியில், எம் காலில் நாம் நின்று எதிரியிடம் கையேந்தாமல் நாம் வாழுகின்ற, இனி வாழ வேண்டிய வழிவகைகளைத் திட்டமிட்டு இறைமையுள்ள நிலையில் வழிவகுத்து, வளரவழிகாட்டிவிட்டுச் சென்றவர்களும் இம்மாவீரர்கள் தான்.

எதிரியிடம் போரிட்டு, மீட்கின்ற மண் வெற்று மண்ணாகவன்றி, மக்கள் வாழ்வு, வளம், கல்வி, நீதி நிர்வாகம், சுகாதாரம் யாவும் சீர்கெட்டுப் போகாமல், சிதைந்தழிந்து போகாமல் போராடி, இவற்றையும் வளர்த்துவிடவேண்டும் என்ற தலைமைத்துவத்தின் திட்டங்களைக் கூடவழுவாது நிறைவேற்றி நிறைவு பெறப் பாடுபட்டு, வழிகாட்டிச்சென்றவர்கள் இம்மாவீரர்கள்.

மாவீரர்களின் மகத்தான நாள் ஆண்டுதோறும் வரும் நவம்பர் மாதம் 27ம் நாள் இந்நாளில் தான் எமது போராட்ட முதல் மாவீரர் லெப்ரினன் சங்கர் என்கின்ற சத்தியநாதன் இம்மண்ணுக்காய்த் தன்னை அர்ப்பணித்தான். இந்நாள் ஈழத்தமிழரின் தேசிய நாள், எமது தலைமைத்துவத்தை உறுதியுடன் ஏற்றுக்கொண்டு எமது தேசியக்கொடியை ஏற்றி வணக்கம் செலுத்த மாவீரருக்கு ஒன்று சேர்ந்து வீரவணக்கம் செலுத்தி மாவீரர் பெற்றோரைக்கௌரவிப்பது இந்நாளில் தமிழீழ மக்களின் தலையாய கடனும், கடமையுமாகும்.

## கொமடோர்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பட்டுள்ளார்.

44 வயதான சமரசேகர வத்தளை சென். அன்ரனிஸ் கல்லூரியில் கல்வி கற்கும் போது படிப்பிலும், விளையாட்டிலும் சிறந்து விளங்கினார். 1967ம் ஆண்டு இலங்கை பல்கலைக்கழகத்திற்கு அனுமதி பெற்று பல்கலைக்கழக உதைபந்தாட்ட கோஷ்டியிலும் இடம்பெற்றார்.

இலங்கைக் குடியரசின் ஆயுதப்படைகள் பதக்கத்தையும், ஆயுதப்படையில் நீண்ட சேவைக்கான பதக்கத்தையும், ஜனாதிபதி பதக்கம், பூரணபூமி பதக்கம், வடமராட்சி இராணுவத் தாக்குதல் பதக்கம் ஆகியவற்றையும் இவர் பெற்றுள்ளார்.

இவர் 1971ம் ஆண்டு கடற்படையில் நேரடியாக உதவி லெப்டினண்ட் பதவியில் சேர்ந்தார். 1985ம் ஆண்டு தளபதியாக பதவி உயர்த்தப்பட்டு, 1990 ஆண்டு கொமடோர் பதவி ஏற்கமுன் 1987ம் ஆண்டு கப்டன் பதவிக்கு உயர்த்தப்பட்டார்.

இவர் அமெரிக்கா, இந்தியாவிலும் கடற்படை கல்லூரிகளில் பயின்றுள்ளார். சமரசேகரா சிறிது காலம் கிழக்குப் பிராந்திய கடற்படை தளபதியாகவும் இருந்துள்ளார். (சி)

## அரச உயரதிகாரி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வீடுகள் இருக்கின்றனவாம்.

இச்சம்பவத்தையடுத்து இப்பகுதிக்கு மேலும் பாதுகாப்பு தீவிரப்படுத்தப்பட்டுள்ளதாக பொலிசார் தெரிவித்தனர்.

தாக்குதல் நடைபெற்ற இடத்திற்கு இராணுவ உயர் அதிகாரிகள் பலரும் நேரில் சென்றுபார்வையிட்டனர். (கி)

## மாவீரர்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மாவீரர்களை நினைவுகூருமுகமாக மாவீரர் வாரம் இன்று முதல் எதிர்வரும் 27 ம் திகதி வரை அனுஷ்டிக்கப்படவுள்ளது.

தேசியக்கொடி இன்றுகாலை 9 மணிக்கு ஏற்றப்பட்டு 27-ம் திகதி மாலை 5 மணிக்கு இறக்கப்படும்.

மேறபடி திகதிகளில் தினமும் காலை 9 மணி முதல் 9.30 மணிவரை கொடிவணக்கமும் மலர் அஞ்சலியும் தமிழீழ மக்களால் செலுத்தப்படும்.

யாழ். மாவட்டத்திலுள்ள அனைத்து மாவீரர் துயிலுமில்லங்களும், பொதுமக்கள் மலர் தூவி அஞ்சலி செலுத்துமுகமாக இன்று காலை 9 மணி முதல் திறந்துவைக்கப்பட்டிருக்கும். (வி-56)

## கொழும்பில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பெர்ணாண்டோவின் கொலைச் சம்பவத்தையடுத்தே இந்த பாதுகாப்பு ஏற்பாடுகள்தீவிரப்படுத்தப்பட்டுள்ளன

இதேவேளை நேற்றுக்காலை இடம்பெற்ற மற்றொரு தாக்குதல் சம்பவத்தையடுத்து பாதுகாப்பு மேலும் பலப்படுத்தப்பட்டுள்ளதாகவும் பொலிசார் தெரிவித்தனர். (கி)

## மெய்ப்பாதுகாவலர்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ந்து கீழே இறங்கி வந்தேன். அப்போது இச்சூட்டுச் சம்பவம் இடம்பெற்றதுடன் துப்பாக்கி நபர் தப்பிச் சென்றார் என்றும் கூறினார். (சி)

## விஜேதாசா

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

இதுதொடர்பான விசாரணைகள் தீவிரமாக முடுக்கிவிடப்பட்டுள்ளதாகவும் பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்தன. (சி)

## நாடாளுமன்றம்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

நாடாளுமன்ற தீவிரவாதிகளின் தாக்குதலுக்கு இலக்காகலாம் என்று இரகசிய தகவல்கள் கிடைத்துள்ளன. எனவே நாடாளுமன்றத்தின் பாதுகாப்பை உறுதியாகப் பேணுவதற்கு எம். பிக்கள் அனைவரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டுமென்றும் அவர் மேலும் அங்குபேசுகையில் கேட்டுக்கொண்டார். (ரி)

க்ளான்ஸி கொலை விவகாரம்:

# மேலும் 4 தமிழ் இளைஞர் பொலிசாரால் கைது

(கொழும்பு)

கடற்படை தளபதிக்ளான்ஸி பெர்ணாண்டோவையும் கடற்படை அதிகாரிகளையும் கொலை செய்ததாக சந்தேகிக்கப்படும் மேலும் நான்கு தமிழ் இளைஞர்களை பொலிஸார் கைது செய்துள்ளனராம்.

இந்தச் சம்பவம் தொடர்பாக குற்றவாளியாக கூறப்படும் சுப்பிரமணியம் லோகமோகனுடன் நெருங்கிய தொடர்புகளை வைத்துள்ள இவர்கள் நால்வரும் கடுமையான பாதுகாப்பின்கீழ் தீவிர விசாரணைக்கு உட்படுத்தப் வருகிறார்கள்

இதேவேளையில் புறக்கோட்டை விடுதியில் சுப்பிரமணியம் லோகமோகனுடன் இரகசியப் பேச்சு நடத்திய பெண் யார் என்று புலனாய்வு பிரிவினர் தீவிர விசாரணை மேற்கொண்டுவருகின்றனர்.

புறக்கோட்டை விடுதிக்கு அடிக்கடி வந்துபோன இந்தப் பெண்ணைதேடும் நடவடிக்கையும் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ரி)

## மந்திரி

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ரைச் சோதனையிட முயன்றபோது அந்த நபர் தனது கைப்பையிலிருந்த ஏ. கே. 47' ரக ரைபிள் ஒன்றை வெளியே எடுத்துசாஜன்டை சுட்டார். பின்னர் சந்தேக நபர் கைக்குண்டு ஒன்றை தரையில் வீசி வெடிக்கச்செய்துள்ளார்.

பின் அருகில் நின்ற காரொன்றிலிருந்த சாரதியை இழுத்துவெளியே தள்ளிவிட்டு காரிலேறி அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளார்.

சில நிமிடங்களில் அப்பகுதிக்கு விரைந்த பெருமளவு படையினர் துப்பாக்கி நபர் கைவிட்டுச்சென்ற பைக்குள்ளிருந்து 'ஏ. கே. 47' ரக மகஸின் ஒன்றையும் ஒரு சில உடைகளையும் இரண்டு கைக்குண்டுகளையும் கண்டெடுத்துள்ளனர்.

உடனடியாக வீதித் தடைகள் போடப்பட்டு பலத்த தேடுதல் நடத்தப்பட்டதுடன் துப்பாக்கி நபர் தப்பிச் சென்ற திசையை நோக்கி பல பொலிஸ் வாகனங்களும் விரைந்து சென்றன. (கி)

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால், யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 63ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில், 1992ம் ஆண்டு நவம்பர் மாதம் 21ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a New Paper at the General Post office, Sri Lanka under Licence Numter B/I0336/8